**கிழக்கு மாகாண நிருவாக சுற்றறிக்கை இல. 01/2011**

எனது இல. EP/02/Gen.Tran/2011
பிரதிப் பிரதம செயலாளர் ~ நிருவாக அலுவலகம்
கிழக்கு மாகாணம்
திருகோணமலை
14.06.2011

**சகல அமைச்சு செயலாளர்கள் / பிரதிப் பிரதம செயலாளர்கள் / திணைக்களத்தலைவர்கள்**
**கிழக்கு மாகாணம்.**

**<u>வருடாந்த இடமாற்றம் - 2012</u>**

2012 ஆம் ஆண்டிற்கான முகாமைத்துவ உதவியாளர் சேவை, சாரதிகள் சேவை, அலுவலகப் பணியாளர் சேவை, தொழில்நுட்ப அலுவலர் சேவை, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் சேவை, அபிவிருத்தி உதவியாளர் சேவை, கணனி தரவுப்பதியுநர் சேவை ஆகிய சேவைகளைச் சார்ந்த அலுவலருக்கான வருடாந்த இடமாற்றம் 01.01.2012 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இதனை முறையாக நடைமுறைப்படுத்த அமைச்சு செயலாளர்கள், திணைக்களத்தலைவர்களின் பூரண ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

**<u>மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் ~ 2012</u>**

**1.** அரச சேவை உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் தொடர்பாக தாபன விதிக்கோவை III ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

சில உத்தியோகத்தர்கள் மிகவும் வசதியான அல்லது வசதியான நிலையங்களில் 05 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிக் கொண்டிருக்க, பல அலுவலர்கள் மிகவும் கஷ்டமான அல்லது கஷ்டமான நிலையங்களில் பல வருடங்களுக்கு மேல் தொடர்ந்தும் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். ஒரே திணைக்களத்தில், ஒரே சேவை நிலையத்தில் தொடர்ந்தும் சிலர் கடமையாற்றுவதனால் அலுவலக நிருவாகத்தில் எழும் பிரச்சினைகளைத் தவிர்க்கும் முகமாக, இவ் வருடாந்த இடமாற்றம் நடைமுறைப்படுத்துவது மிகவும் அவசியமாகும்.

**2.** இதற்கேதுவாக கீழ்க் குறிப்பிட்டதன் பிரகாரம் இடமாற்றச்சபைகள் அமைக்கப்படல் வேண்டும்.

**2.1** **<u>திணைக்கள ரீதியான இடமாற்றசபை:</u>**
திணைக்களம் ஒன்றிற்குள் சேவை நிலையங்களிற்கிடையிலான இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தல். இது திணைக்கள மட்டத்திலான இடமாற்ற சபையால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**2.2** **<u>அமைச்சு மட்டத்திலான இடமாற்றசபை:</u>**
ஒரு அமைச்சின் கீழ் செயற்படும் திணைக்களங்களிற்கிடையில் இடமாற்றம் தொடர்பான நடவடிக்கைகள் அமைச்சு மட்டத்திலான இடமாற்ற சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**<u>முக்கிய குறிப்பு:</u>**

I. மேற்குறிப்பிட்ட இவ்விரு இடமாற்றச் சபைகளாலும் தொடர்ச்சியாக 05 வருடங்களுக்கு மேல் ஒரே பிரதேசத்தில், ஒரே சேவை நிலையத்தில் கடமையாற்றியோரை இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், பின்வரும் விடயங்களும் கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

*உதாரணமாக*

(அ) திருகோணமலை பிரதேச செயலக பிரிவில் பிரதம எந்திரி அலுவலகத்திலிருந்து நிறைவேற்று எந்திரி அலுவலகத்திற்கு அல்லது அதே திணைக்கள தலைமைப் பணிமனைக்கு இடமாற்றம் செய்தலைத் தவிர்த்தல்.

(ஆ) கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் இருந்து கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம், அல்லது திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்தலைத் தவிர்த்தல்.

II. இவ்வாறு 05 வருடத்திற்கு மேல் சேவையாற்றியோர் பலர் ஒரு திணைக்களத்தில் இருந்தாலும் அவர்களுள் 25% இற்கு மேற்படாதோர் அலுவலக தேவை கருதி தொடர்ந்தும் இவ்வருடம் கடமைபுரிய அனுமதிக்கப்படலாம். எனவே அவ்விடயத்தில் கூடிய காலம் சேவையாற்றியோர் வரிசை அடிப்படையில் இடமாற்றத்திற்குட்படுத்தப்படல் வேண்டும்.

2.3 **அமைச்சுக்களுக்கிடையிலான இடமாற்றசபை:**
(1ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சகல உத்தியோகத்தர்களுக்கானது)
அமைச்சுக்களுக்கிடையிலும் திணைக்களங்களுக்கிடையிலும் உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உரிய இடமாற்ற விண்ணப்பங்கள் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர்(நிருவாகம்) அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

2.4 இடமாற்றங்கள் தொடர்பாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு சேவைகளுக்குமென வெவ்வேறான இடமாற்றச் சபைகள் உருவாக்கப்படலாம்.

2.5 இடமாற்றச்சபை அங்கத்தவர்களுக்கான நியமனக் கடிதங்கள் உரிய அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியினால் வழங்கப்படல் வேண்டும்.

3. இடமாற்றத்திற்குட்படுத்தப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான தகைமைகள்:

3.1 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ம் திகதியில் ~

(அ) ஒரே பிரதேசத்தில் ஒரே சேவைநிலையத்தில் தொடர்ச்சியாக 05 வருட சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த சகல உத்தியோகத்தர்களும்

(ஆ) ஏதாவதொரு சேவை நிலையத்தில் 02 வருடங்கள் சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர் ஒருவர் விரும்பினால் இடமாற்றம் கோருவதற்கான தகைமையை கொண்டவராவார்.

3.2 எந்தவொரு அலுவலகத்திலும் 05 வருடங்களிற்கு மேல் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் சகலரும் இடமாற்றம் பெற விரும்பும் 03 சேவை நிலையங்களைக் குறிப்பிட்டு படிவம் இல.01 இல் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு முன்வைக்கப்படும் விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ள இடங்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், அவ்வாறு கோரப்பட்ட நிலையத்திற்கு இடமாற்றம் செய்ய முடியாத பட்சத்தில் இடமாற்றச் சபைகளின் தீர்மானத்திற்கமைய வேறு சேவை நிலையம் வழங்கப்படலாம்.

3.3 கணவன் அல்லது மனைவி இருவரும் மாகாண அரச சேவையில் உள்ளவர்களாயின் அவர்கள் இருவரையும் ஒரு பிரதேசத்தில் கடமை ஆற்றுவதற்கு ஏதுவாக இடமாற்றுவதில் இடமாற்றசபை கூடியளவு கவனம் செலுத்தும்.

3.4 உத்தியோகத்தரின் கோரிக்கை, அல்லது வேறு விசேட காரணங்களின்றியோ, பொதுவாக 53 வயதின் பின்னர் மாவட்டத்திற்கு வெளியில் இடமாற்றம் செய்வது தவிர்க்கப்படுவதுடன், ஒழுக்காற்று கட்டளைகள் மற்றும் ஏனைய விசேட காரணங்கள் இருந்தாலன்றி 55 வயதிற்கு மேற்பட்டோரை இடமாற்றம் செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் 57 வயதிற்கு மேற்பட்டோர் இடமாற்றம் செய்யப்படலாகாது.

3.5 இடமாற்ற கட்டளை வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உரிய திகதியில் விடுவிக்கப்படாமல் இருப்பது இடமாற்றக் கொள்கைக்கு முரண்பாடானது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் திணைக்களத்தலைவரே இவ் விடயத்திற்கு முழுப்பொறுப்புள்ளவராவார்.

3.6 பாடசாலை செல்லும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படாத வண்ணம் கூடியளவு அனைத்து இடமாற்றங்களும் ஜனவரி மாதம் 01ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

3.7 பதிவு செய்யப்பட்ட இச் சேவைகளுடன் தொடர்புபட்ட தொழிற்சங்கத்தின் தலைவர் / செயலாளர் / பொருளாளர் மற்றும் மத்திய குழு உறுப்பினரை இடமாற்றம் செய்வதாயின் தொழிற்சங்க செயலாளரின் சிபாரிசு கவனத்திற் கொள்ளப்படலாம்.

**3.8** மிக வசதியான சேவை நிலையங்களிற் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் ஒருவர் இன்னுமொரு மிக வசதியான சேவை நிலையத்திற்கு இடமாற்றம் கோரும் போது வசதியற்ற சேவை நிலையங்களில் கடமையாற்றுபவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றியதன் பின்பே இவர்களின் கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படல் வேண்டும்.

**3.9** அமைச்சுகளுக்கிடையிலான இடமாற்றம் இச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவஇல.01 இற்கமைய தயாரிக்கப்பட்டு திணைக்களத்தலைவரினால் / அமைச்சு செயலாளரினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**4.** பந்தி 02 இற் குறிப்பிடப்பட்டதற்கமைய திணைக்கள மட்ட இடமாற்ற சபையினாலும் அமைச்சு மட்டத்தினாலான இடமாற்ற சபையினாலும் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்பு மேலும் இடமாற்றப்பட வேண்டிய 1ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்றத்தினை பிரதிப் பிரதம செயலாளர்(நிருவாகம்) அலுவலக இடமாற்ற சபை மேற்கொள்ளும்.

**(அ)** இவ்வலுவலகம் மூலம் 1ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான இடமாற்ற பட்டியல் தயாரிக்கப்பட்டதன் பின்னர் சில அமைச்சுக்கள் / திணைக்களங்களில் இடமாற்றங்கள் நடைபெறுவதனால் வருடாந்த இடமாற்றத்திட்டம் சிக்கலுக்குள்ளாகின்றது. எனவே இதனைத் தவிர்க்கும் முகமாக திணைக்களம் /அமைச்சு இடமாற்றங்கள் பந்தி 8-1 இல் காட்டப்பட்ட கால அட்டவணைக்கமைவாக செயற்படுத்தப்பட்டு அவ்வாறான தீர்மானங்கள் செப்தெம்பர் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் பிரதிப் பிரதம செயலாளருக்கு(நிருவாகம்) அவர்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் எவ்வாறான இடமாற்றமும் செய்யப்படலாகாது.

**(ஆ)** அமைச்சு / திணைக்களங்களுக்கிடையிலான இடமாற்றத் தீர்மானங்கள் செப்தெம்பர் 09 ஆந் திகதிக்கு முன்னர் பிரதிப் பிரதம செயலாளர்(நிருவாகம்) அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படாவிட்டால் அவ்வமைச்சு / திணைக்களம் உள்ளக இடமாற்றங்களைச் செயற்படுத்தமாட்டாது எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

**5.** 2011.12.31 ஆந் திகதியன்று ஒரே சேவை நிலையத்தில், ஒரே பிரதேசத்தில் 05 வருடங்களிற்கு மேலாக சேவையைப் பூர்த்தி செய்யும் 1ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சகல உத்தியோகத்தர்களும் தத்தமது விண்ணப்பங்களைப் படிவ இல. 01 இல் பூர்த்தி செய்து திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இடமாற்றம் பெறத்தகுதி பெற்ற இவ்வுத்தியோகத்தர்கள் அமைச்சு / திணைக்கள இடமாற்றச் சபையினால் இடமாற்றம் செய்யப்படாத விடத்து அவர்களின் இடமாற்ற விண்ணப்பங்களையும், படிவ இல. 02 இனையும் பூர்த்தி செய்து திணைக்களத் தலைவர்கள் இடமாற்றம் செய்வதற்காக பிரதிப் பிரதம செயலாளர்(நிருவாகம்) அவர்களுக்கு செப்தெம்பர் 09 ஆந் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும்.

**6.** இடமாற்றக் கட்டளைக்கெதிராகச் செய்யப்படும் மேன் முறையீடுகளை பரிசீலனை செய்வதற்காக தாபனக் கோவை III ஆம் அத்தியாய பிரிவு 5 இன் கீழ் மேன்முறையீட்டுச் சபை தாபிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வருடாந்த இடமாற்றம் தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தாபன விதிக்கோவைக்கமைவாக சமர்ப்பிக்கப்படும் பட்சத்திலேயே பரிசீலனை செய்யப்படல் வேண்டும்.

**7.** இச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட கால அட்டவணைக்குள் எவ்வித ஒத்துமாறல் இடமாற்றங்களும் மேற்கொள்ளப்படலாகாது.

**8.** 1ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் தொடர்பாக இடமாற்றத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது கீழ் குறிப்பிடப்படும் கால அட்டவணைக்கமைய செயற்படுத்துதல் வேண்டும்.

8.1 இச் சுற்றறிக்கையில் பந்தி 2 இற்கமைவாக

| | |
|---|---|
| 2011 ஜூலை 01 | இடமாற்ற சபைகளை அமைத்தலும், இடமாற்றத்திட்டத்தினை வகுத்தலும் விண்ணப்பங்களைக் கோருதலும். |
| 2011 ஜூலை 29 | விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கான கடைசித் திகதி |
| 2011 ஆகஸ்ட் 15 | திணைக்கள இடமாற்றங்கள் யாவும் நிறைவு செய்தல். |
| 2011 செப்தெம்பர் 05 | அமைச்சு மட்டத்திலான இடமாற்றங்களை நிறைவு செய்தல். |

| | |
|---|---|
| 2011 செப்தெம்பர் 09 | பிரதிப் பிரதம செயலாளர்(நிருவாகம்) அலுவலகத்திற்கு 5ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்ற பட்டியல்களை சமர்ப்பித்தல். |
| 2011 செப்தெம்பர் 21 | இடமாற்ற சபை கூடி இடமாற்றத் தீர்மானங்களை மேற்கொள்ளுதல். |
| 2011 ஒக்டோபர் 01 | இடமாற்றத் தீர்மானங்களை அமைச்சு / திணைக்களங்களுக்கு அறிவித்தல். |
| 2011 ஒக்டோபர் 19 | இடமாற்ற மேன்முறையீடுகளைப் பெற்றுக் கொள்ளும் கடைசித் திகதி. |
| 2011 நொவெம்பர் 15 | மேன்முறையீடு தொடர்பான தீர்மானங்களை அறிவித்தல். |

**9.** சகல உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் பூரணமான விபரங்களை சமர்ப்பிப்பதில் திணைக்களத் தலைவர்கள் தமது தனிப்பட்ட அவதானத்தைச் செலுத்துதல் வேண்டும்.

**10.** இடமாற்றம் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு உத்தியோகத்தரும் தமக்கு கிடைக்கப்பெற்ற கட்டளைக்கமைவாக குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட சேவை நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்க வேண்டும்.

**11.** இச் சுற்றறிக்கை தாபன விதிக் கோவை இடமாற்றக் கொள்கைகளுக்கமைவாக வெளியிடப்பட்டுள்ளது.

**12.** இச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களையும் தங்கள் அமைச்சில் / திணைக்களத்தில் / அலுவலகத்தில் கடமையாற்றுகின்ற சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

**வே.பொ.பாலசிங்கம்**
பிரதம செயலாளர்
கிழக்கு மாகாணம்.

**படிவ இல. 01**

## வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பம் ~ 2012

01. (அ) தற்போதைய சேவை நிலையம் : ..............................................................................
அமைச்சு : ..........................................................................................................
திணைக்களம் : ....................................................................................................

(ஆ) சேவை நிலையம் (நகரம்) : ...................................................................................

02. (அ) உத்தியோகத்தரின் முழுப்பெயர் (பெரிய எழுத்துக்களில்) : .........................................
(ஆ) உத்தியோகத்தரின் தனிப்பட்ட முகவரி : ......................................................................

03. i. பிறந்த திகதி : ........................................ வயது : .............................................................
ii. பால் : ஆண் / பெண் தேசிய அடையாள அட்டை இல : ..............................................
iii. உத்தியோகத்தரின் தற்போதைய வசிப்பிடம் : ..........................................................

04. i. (அ) தற்போதைய சேவை : ....................................................................................
(ஆ) இச் சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி : ..................................................................
ii.மொழி மூலம் : ............................................................................................................
iii.தற்போதைய வகுப்பு / தரம் : ..........................................................................................
iv.இவ்வகுப்பிற்கு அல்லது தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட திகதி : ..............................................
v.நிரந்தர நியமனக் கடித இலக்கமும் திகதியும் : ....................................................................

05. (அ) விவாகமானவரா? அல்லது விவாகமாகாதவரா?

i. பிள்ளைகளின் எண்ணிக்கையும், வயதும் : ...........................................................................
ii. பாடசாலை செல்லும் பிள்ளைகள் இருப்பின் அவர்கள் கல்வி பயிலும் பாடசாலை :
I. ...............................................................................................................................
II. ..............................................................................................................................
III. .............................................................................................................................

**iii. வாழ்க்கைத்துணை அரச உத்தியோகத்தராயின்**

(அ) அவர் சேவையாற்றும் அமைச்சு / திணைக்களம் / சேவை நிலையம் : ......................................
(ஆ) அவர் வகிக்கும் பதவி : ...............................................................................................

06. சேவைக்குச் சேர்ந்த திகதியிலிருந்து இன்றுவரை கடமையாற்றும் சேவை விபரம்:
(சிற்றூழியர்தரம், அமைய, தற்காலிக சேவை விபரம் உட்பட)

**(*இப் படிவம் பூரணப்படுத்தும் போது, சேவை நிலையம் முக்கியமானதாகக் கருதப்படும். எனவே இப்படிவத்தில் இடம் போதாவிட்டால் இணைப்பில் சேர்த்துக் கொள்ளவும்)**

| இருந்து | வரை | முழுச்சேவைக்காலம் | | சேவை நிலையம் | திணைக்களம் / அமைச்சு |
|---|---|---|---|---|---|
| | | வருடங்கள் | மாதங்கள் | | |
| | | | | | |

***பூரணமற்ற, தவறான விபரங்கள் வழங்குவது ஒழுக்காற்று தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதை கவனத்திற்கொள்ளவும்.**

**07. இடமாற்றம் பெற விரும்பும் அமைச்சு / திணைக்களம் விருப்புரிமை அடிப்படையில் குறிப்பிடவும்.**

| **சேவை நிலையம்** | **திணைக்களம் / அமைச்சு** | **மாவட்டம்** |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

08. விண்ணப்பிப்பதற்கான காரணங்கள்:

1.

2.

3.

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனப் பிரகடனப்படுத்துகின்றேன். என்னால் குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையற்றவையாக நிரூபிக்கப்பட்டால் எனக் கெதிராக *ஒழுக்காற்று நடவடிக்கை* எடுக்க முடியுமென நான் அறிவேன் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.**

திகதி : ...................................

...................................................

உத்தியோகத்தரின் ஒப்பம்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

**அமைச்சின் செயலாளர் / திணைக்களத் தலைவர் விதப்புரை**

உரிய ( பதலீட்டுடன் / பதிலீடின்றி ) உத்தியோகத்தரை விடுக்க ( முடியும் / முடியாது).

விண்ணப்பம் சிபார்சு ( செய்யப்பட்டுள்ளது / செய்யப்படவில்லை).

திகதி: .......................................

.........................................................................

திணைக்களத் தலைவரின் ஒப்பம்
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

படிவ இல.02

# <u>வருடாந்த இடமாற்றம் ~ 2012</u>

## (ஒவ்வொரு சேவைக்கும் தனித்தனியான படிவங்களை உபயோகிக்கவும்)

***<u>ஒரே சேவை நிலையத்தில் 31.12.2011 இல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கால சேவையைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்களின் விபரங்கள்</u>***

**<u>*கூடுதலான சேவைக்காலத்தினைக் கொண்டவர்களின் பெயர் முன் ஒழுங்கு அடிப்படையில் இடம் பெறுதல் வேண்டும்</u>**

அமைச்சு / திணைக்களம் : ........................................................................................ சேவை நிலையம் : ..............................................................................

| உத்தியோகத்தரின் பெயர் | பதவி/ தரம் / வகுப்பு | தேசிய அடையாள அட்டை இல. | பிறந்த திகதியும் 2011.12.31 இல் வயதும் | 31.12.2011 இல் தற்போதுள்ள சேவை நிலையத்தில் சேவைக்காலம் | | வாழ்க்கைத்துணை அரச அலுவலராயின் சேவை நிலையம் | பாடசாலை செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை | நிரந்தர முகவரி | வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கப் பட்டதா? | அமைச்சு / திணைக்கள இடமாற்றம் வழங்கப்பட உள்ளதா? |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வருடங்கள் | மாதங்கள் | | | | | |
| | | | | | | | | | | |

ஒப்பம்:
தயாரித்தவர் பெயர்: .......................................................

ஒப்பம்:
பரிசீலனை செய்தவர் பெயர்: .......................................................

இவ்வமைச்சில் / திணைக்களத்தில் / அலுவலகத்தில் 05 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய சகல உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்களும், இடமாற்றம் கோரியோரது விபரங்களும் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ................................

.............................................................
திணைக்களத்தின் தலைவரின் ஒப்பம்
(அலுவலக முத்திரை)